பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 28 சனிக்கிழமை (10-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 134

# மணலாறில் பெரும் அதிரடித் தாக்கு; அதிகாரி உட்பட 19 படையினர் பலி!

## ஏராளமான ஆயுத தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஏப்ரல் 10

மணலாறில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் அதிரடித் தாக்குதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 19 படையினர் உயிரிழந்தனர். அங்கு பெருவாரியான ஆயுத தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்றைய தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட 19 படையினர் உயிரிழந்த சம்பவத்தைக் கூட்டுப் படைகள் தலைமையகமும் ஒப்புக் கொண்டது

மணலாறில் கல்யாணபுரத்திற்கும் அட்டகஸ்வெவ என்ற இடத்திற்கும் இடையில் உள்ள படையினரின் முன்னணிக் காவல் நிலைகள் மீதே விடுதலைப் புலிகள் இந்தத் துணிகரத் தாக்குதலை நடத்தினர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

புலிப் போராளிகள் தாக்குதல் நடத்திய சமயம் ஸ்ரீலங்காப் படையினர் பீரங்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிக் கொப்டர்கள் மற்றும் விமானங்களின் உதவியுடன் பதில் தாக்குதலை நடத்தினர் என்று கூட்டுப்படைகள் தலைமையகம் தெரிவித்தது.

(ஒ-எ)

### ● இவ்வருடத்தில் பெரிய தாக்குதல்

லண்டன், ஏப். 10

மணலாறில் நேற்று இடம் பெற்ற அதிரடித் தாக்குதல் சம்பவம், இந்த ஆண்டில் விடுதலைப் புலிகள் நடத்திய மிகப்பெரிய அளவிலான தாக்குதலாகும் என்று பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் யஸ்வந்த் சிங் தெரிவித்தார்.

(ஒ-எ)

### அவ்ரோ, ஹெலி நோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 10

வல்லைவெளிப் பகுதியில் நேற்று பிற்பகல் 3-45 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்றும் ஹெலி ஒன்றும் வட்டமிட்டு நோட்டமிட்டன.

இதற்கிடையில் —

நேற்று முழுநாளும் யாழ். குடாநாட்டு வான் பரப்பில் விமானங்கள் ஓயாது பறந்தபடி இருந்தன. (ஒ-15)

## மன்னாரில் 'ஒபரேஷன் சங்கு' இராணுவ நடவடிக்கை

கொழும்பு, ஏப். 10

மன்னார் மாவட்டத்தில் 'ஒபரேஷன் சங்கு' என அழைக்கப்படும் இராணுவ நடவடிக்கையை ஆயுதப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

பீரங்கிகள் பொருத்தப் பட்ட ஹெலிக்கொப்டர்களின் உதவியுடன் படையினர் மறிச்சுக்கட்டி, முள்ளிக்குளம் ஆகிய இடங்களில் நேற்று தாக்குதல் நடத்தினர் என்று கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் தெரிவித்தது.

விளாச்சி இராணுவ முகாமில் இருந்தும் முள்ளிக்குளம் கடல்மார்க்கமாகவும் வந்த படையினர் தற்சமயம் முள்ளிக்குளம், மறிச்சுக்கட்டி, பாலைக்குழி ஆகிய இடங்களில் நிலை கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் கடற்படையினரும் இணைந்து இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## புத்தாண்டு காலத்தில் யுத்த நிறுத்தம் இல்லை?

கொழும்பு, ஏப். 10

புதுவருட காலத்தில் யுத்த நிறுத்தம் மேற்கொள்வதற்கான தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. படையினர் வழமை போல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

விடுதலைப் புலிகள் தாக்கினால் படையினர் பதில் தாக்குதல் நடத்துவார்கள்.

கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று முன்தினம் வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு கூறினார்.

இதேவேளை —

எதிர்வரும் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு கடந்த காலங்களில் இத் தினங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளையே இம்முறையும் மேற்கொள்வதுஎன்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

## பூநகரிப் பாதை விவகாரம்; தொடர்ந்தும் ஆராய்வு

### ஜனாதிபதியின் ஆலோசகர் தகவல்

கொழும்பு, ஏப். 10

பூநகரி — சங்குப்பிட்டிப் பாதைத் திறப்பு விவகாரம் குறித்து தொடர்ந்தும் ஆராயப்பட்டு வருகிறது.

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சங்குப்பிட்டிப் பாதையைப் போக்குவரத்துக்குத் திறந்து விட இரண்டு அல்லது மூன்று மாதங்கள் வரை செல்லலாம் என்றும் அவர் கூறினார்.

சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து விடுவது குறித்து அகதிகளுக்கான ஐ நா. தூதரகமும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-எ)

## அ.தி.மு.கவினரால் தமிழக காங். எம்.எல்.ஏக்கள் ஐவர் கடத்தப்பட்டனர்!

### வாழப்பாடி குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 10

தமிழ்நாடு சட்டசபையில் உள்ள இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களில் ஐந்து பேரை அ. தி. மு க. வினர் கடத்திச் சென்றார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று இதனைத் தெரிவித்தார்.

சட்டசபையில் உள்ள காங்கிரஸ் உறுப்பினர்களிடையே பிளவு ஏற்படுத்தும் நோக்கத்துடன் கடத்தச் செல்லப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்களுடன் முதலமைச்சர் பேச்சு நடத்தியதாகவும் —

இதில் இரண்டு அமைச்சர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்றும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அ. தி. மு. க. மிகவும் ஆபத்தான பாதையில் செல்கிறது என்றும் —

இக்கடத்தல் சம்பவம் பற்றி பிரதமர் நரசிம்மராவுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(ஒ-எ)

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து

## ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது மறு பரிசீலனை!

### தூதுவர்கள் யாழ். வர விருப்பம்

யாழ்ப்பாணம், ஏப். 10

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழ் அகதிகளை அந்த நாடுகள் இப்போதைக்கு — உடனடியாக — திருப்பி அனுப்பமாட்டா.

அவர்களைத் திருப்பி அனுப்புவது குறித்துத் தீர்க்கமான முடிவை மேற்கொண்டு செயலில் இறங்குவதற்கு முன்னர் அந்த நாடுகள் இவ்விடயத்தை மீளாய்வு செய்ய உள்ளதாக கொழும்பில் உள்ள மேற்கு நாடுகளின் தூதரக வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

ஜேர்மன், பிரிட்டன், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து ஆகியமேற்குஐரோப்பிய நாடுகளிலும், நோர்வே போன்ற ஸ்கன்டினேவியன் நாடுகளும் ஈழத்தமிழ் அகதிகளைத் தத்தமது நாடுகளில் இருந்து திருப்பி அனுப்புவதற்கு உத்தேசித்துள்ளதாகச் செய்திகள் வெளிவந்தன.

ஆனால் சம்பந்தப்பட்ட நாடுகள் கொழும்பில் உள்ள தமது தூதரகங்களுக்கு கடந்த மாத இறுதியில் அனுப்பி வைத்த அறிவுறுத்தலகளில் ஈழத் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்கு - கிழக்கில், அகதிகள் திரும்பி வரும் பட்சத்தில் அவர்கள் பாதுகாப்புடன் வாழ முடியுமா என்பது குறித்து விளக்கமான அறிக்கைகளைக் கோரியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதுவர்கள் தாமே வடக்கு - கிழக்குக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் மதிப்பிட முனைந்திருப்பதாகவும் அறிய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் இன்று ஆரம்பம்; டாக்காவில் ஆர்ப்பாட்டம்

டாக்கா, ஏப். 10

ஒத்திவைக்கப்பட்ட "சார்க்" உச்சிமாநாடு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் இன்று ஆரம்பமாகிறது மாநாடு நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று டாக்கா போய்ச் சேர்ந்தார்.

தற்போது தாய்லாந்தில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கிலிருந்து நேராக டாக்காவுக்கு இன்று காலை புறப்பட்டுச் செல்வார்.

இதற்கிடையில் —

பங்களாதேஷ் அரசின் தடை உத்தரவை மீறி தலைநகர் டாக்காவில் உள்ள முக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை கிராமங்கள் திடீர் சுற்றிவளைப்பு

### அப்பாவி தமிழ் மக்கள் பலர் கைது

மட்டக்களப்பு - வாழைச் சேனைப் பகுதி தமிழ்க் கிராமங்களை நேற்று முன்தினம் வியாழன் அதிகாலை ஸ்ரீலங்காப் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது ... அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த புதனன்றும் வாழைச் சேனைப் பகுதி கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு அப்பாவித் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று கைது செய்யப்பட்டவர்கள் இதுவரை விடுவிக்கப்படவில்லை என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலணைக் கொத்தணி அதிபராகவும்,
சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய
மகாவித்தியாலய அதிபராகவும்
கடமையாற்றி ஓய்வு பெறும்

**திரு. சே. பொ. கேதாரநாதன்**

அவர்களின்

சேவையைக் கௌரவித்து நடைபெறும்

## சேவைநலம் பாராட்டு விழா அழைப்பு

இடம் : யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி
மண்டபம்

காலம்: 1993 - 04 - 11 ஞாயிற்றுக்கிழமை
காலை 8-00 மணி

நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன் ¦டன் அழைக்கிறோம்.

வேலணைக் கொத்தணிப் பாடசாலைகளின்
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், நலன்விரும்பிகள்.

(25185)

---

வாஸிம் அக்ரம் உட்பட 4 வீரர்கள் பிடிபட்டனர்

# பாக். கிரிக்கெட் அணி தலைவர் போதைப் பொருளுடன் கைது!

## மேற்கிந்தியத்தீவில் சம்பவம்

லண்டன், ஏப். 10

மர்ஜுவானா போதை வஸ்து வைத்திருந்த குற்றச்சாட்டின் மீது பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் வாஸிம் அக்ரமும் மற்றும் மூன்று வீரர்களும் மேற்கிந்தியத்தீவில் ஒன்றான கிரனேடாவில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று பி.பி.சி. வானொலி அறிவித்தது.

யூனூஸ், ஜாவட், முஷ்டாக் அஹ்மத் ஆகியோரே சம்பந்தப்பட்ட ஏனைய வீரர்கள் ஆவர்.

இச்சம்பவம் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் கருத்து வெளியிடவில்லை.

(உ-எ)

---

★ வடக்கு, கிழக்கில்

# சித்த ஆதார வைத்தியசாலை புதிதாக ஏழு அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 10

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏழு சித்த ஆதார வைத்தியசாலைகள் விரைவில் அமைக்கப்படவிருக்கின்றன.

சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் ஜயாலிய மொடகம இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையில் பயின்று வருடா வருடம் வெளியேறும் டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வசதியாக ஆதார வைத்தியசாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று, கொழும்பில் செயலாளரை சந்தித்த யாழ். சித்த மருத்துவத்துறை மாணவர் சங்கப் பிரதிநிதிகள் வற்புறுத்தியிருந்தனர்.

புதிய வைத்தியசாலைகளை அமைக்கும் ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் ஐம்பது ஆயுள்வேத வைத்தியசாலைகளை ஸ்தாபிக்க தமது அமைச்சுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் —

அதில் 7 சித்த ஆதார வைத்தியசாலைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அமைக்க கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் சுதேச வைத்தியத்துறை அமைச்சுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(உ-3)

---

## உணவில் இரும்புச் சத்து

யாழ்ப்பாணம், ஏப். 10

உணவில் இரும்புச் சத்து குறைந்தால் குருதிச் சோகை ஏற்படும். நமது நாட்டில் பெரும்பாலான பெண்கள், முக்கியமாக கர்ப்பவதிகள் குருதிச் சோகையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஓர் ஆணுக்கு ஒரு நாளைக்கு 10 மில்லி கிராமும் பெண்களுக்கு 20 மி. கிராமும் கர்ப்பவதிகளுக்கு 40 மில்லி கிராமும் இரும்புச்சத்து தேவை

100 கிராம் நிறையுள்ள இலை வகைகளில் காணப்படும் இரும்புச் சத்தின் அளவு வருமாறு;-

வல்லாரை — 68 8 மி. கி, கீரை வகை — 22 மி. கி முதல் 38 மி. கி வரை, இலைக் கோவா — 12.5 மி கி, கறிவேப்பிலை — 7 மி. கி, அகத்தி — 3. 9. மி. கி.

---

## உற்பத்தி எழுச்சி வாரம் ஏப்ரல் 24 ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம், ஏப். 10

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் உற்பத்தி எழுச்சி வாரம் இந்த வருடமும் ஏப்ரல் 24 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கொண்டாடப்பட உள்ளது.

வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக பல்வேறு வகையான போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்கல், தரிசு நிலங்களை பயிர்ச் செய்கைக்கு உரிய தாக்கல், குளங்கள் வாய்க்கால் வீதிகள் திருத்தம் என்பன இவ்வாரத்தில் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

இது தொடர்பாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நீச்சல், பாய்மரம் ஓட்டல், துடுப்பு வலித்தல், வலை பின்னுதல், கயிறு புனைதல், துலா மிதித்தல், உழுதல், வண்டிச் சவாரி, நிலம் கொத்துதல், புதிய வகை உணவு தயாரிப்பு, பனை மரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், அதிக பதநீர் உற்பத்தி, வீட்டுத் தோட்டச் செய்கை, நல்லின கால்நடை வளர்ப்பு, குளம் வாய்க்கால் வீதி திருத்தல் ஆகிய போட்டிகள் வட்ட, கோட்ட, மாவட்ட மட்டத்தில் தமிழீழத்தில் இடம்பெறும். மேலதிக விவரங்களை வட்ட, கோட்ட உற்பத்திக் குழுச் செயலகங்களிலும் அரசியல்துறை செயலகங்களிலும் அறியலாம் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

---

## விவசாய பீடத்துக்கு ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஏப் 10

கிளிநொச்சி விவசாயபீடத்துக்கு 3 மாதத்துக்கு ஒரு தடவை 40 பரல் மண்எண்ணெய் எடுத்துவர கூட்டுப்படைகள் தலைமையகம் முதல்தடவையாக அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பிலிருந்து வாகன அணிமூலம் மண்எண்ணெய் பரல்களை எடுத்துவர விவசாயபீடம் முயற்சிஎடுத்து வருகிறது.

(உ-3)

---

## சார்க் இன்று ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிய பள்ளிவாசல் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்த பின்னர் முஸ்லிம் தீவிரவாதிகள் இந்தியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சில நூறு பேர் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தை பாப்ரி மசூதி செயற்குழு நடத்தியது.

அயோத்தியில் மீண்டும் பாப்ரி மசூதி கட்டப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

பிரதமர் நரசிம்மராவ் டாக்கா வரக் கூடாது என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பள்ளிவாசல் குழுவின் தலைவரான மௌலானா அஸிஸ் என்பவர் பேசுவதற்காக எழுந்தபோது பொலீஸார் அவரைக் குண்டுக்கட்டாகத் தூக்கிச் சென்று ஜீப்பில் ஏற்றிக்கொண்டு சென்றனர். பல ஆர்ப்பாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். கூட்டத்தையும் பொலீஸார் கலைத்துவிட்டனர்.

(உ-எ)

---

## "உதயன்" வெற்றிக் கிண்ணத்துக்காக

பருத்தித்துறை ஐக்கிய வி. க.
நடத்தும்
7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையேயான
இரண்டாவது வருடாந்த

## உதைபந்தாட்டப் போட்டி

★ "நொக்கவுட்" முறையில் நடத்தப்படும் இப் போட்டித் தொடருக்கு கழக அணிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்ப முடிவு திகதி:- 15—04—93

★ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
திரு. சொ. விஜயராஜா, போட்டிக் குழு பொறுப்பாளர், ஐயனார் வீதி, பருத்தித்துறை

★ விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கையில் உள்ள "உதயன்" பணிமனையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப் போட்டித் தொடர் "உதயன்" ஆதரவுடன் நடத்தப்படுகின்றது.

பருத்தித்துறை ஐக்கிய வி. க. — ஜெ. அரவிந்தன்
10—04—93 (சி/8020) செயலாளர்

---

## யாழ். இந்து மகளிர் கல்லூரி பொன் விழாச் சபை

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பிற்கான திகதியை

## நீடித்தல்

பொன் விழா நிதிக்காக பொன் விழாச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நண்பர்களுக்கு மட்டுமான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பினை 02—05—93 ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது தவிர்க்க முடியாத காரணத்தினால் இச் சீட்டிழுப்பு 22 05-93 ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சீட்டு விற்பனைக்கான இறுதித் திகதி: 18-05-93 ஆகும்.

திருமதி தி. நாகராஜா — திரு. நா. செல்வரத்தினம்
தலைவர் — செயலாளர்

(சி/4915)

---

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் ஆறுமுகம் சின்னத்துரை**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் : 10 — 11 — 1925
மறைவு : 10 — 04 — 1991

திதி : 17 — 04 — 1993

பாசமெனும் நினைவலைகளை எம்மீது
பாரெல்லாம் பொழிந்துவிட்டு
பாராமுகமாக ஏன் ஐயா சென்றுவிட்டீர்!
என்றும் உங்கள் நினைவுடனே வாடுகின்றோம்
உம் ஆத்மா சாந்திக்காக ஆண்டவனை
வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்

'மலர் வாசா',
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

(25188)

---

தாவடி

## ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய அலங்கார உற்சவம்

காலம் : 16 - 04 - 93 வெள்ளிக்கிழமை

பகல் : பிராயச்சித்த அபிஷேக ஆராதனைகள்

மாலை 4 00 மணி :
விசேட மேளக்கச்சேரியுடன் திருக்கல்யாண வைபவம்.

இரவு 6-00 மணி :
ஆலயத்தில் பத்துத் தினங்கள் "திருமந்திரச் சிந்தனைகள்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றிய திரு. சிவ. மகாலிங்கம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவித்தல்.

இரவு 7 00 மணிமுதல் 8-30 மணிவரை :
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அன்னச் சப்பறத்தில் இரு மூர்த்திகளும் வீதி உலா வருதலுடன் விழா நிறைவுபெறும்.

இவ்விழாவிற்காக நிதியுதவிகள் வழங்க விரும்பும் அன்பர்கள், விழா அமைப்பாளர்களிடம் பணத்தை கோவில் உற்சவகால நேரத்தில் கோவிலில் வைத்துச் செலுத்தலாம்.

தாவையம்பதி வாழ் இளைஞர்கள்
அலங்கார உற்சவ உபயகாரர்

(சி/4821)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி வந்து சேரவில்லை:

# மாநகரசபையின் அபிவிருத்தி திட்டங்கள் ஸ்தம்பிக்கும் நிலை

அரியாலை, ஏப். 10

யாழ். மாநகர சபையின் இவ்வருடத்திற்கான புனருத்தாரண அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியை புனர்வாழ்வு அமைச்சு இதுவரை அனுப்பி வைக்கவில்லை என்றும் —

இதனால் யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முழுமையாகப் பாதிக்கப்படலாம் என்றும் மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கென தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஊழியர்களையும் பதவியிலிருந்து நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

இதேவேளை —

தற்போது கொழும்பு சென்றுள்ள யாழ். அரச அதிபர் இது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சின் உயரதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவார் என்று தெரிவித்த ஆணையாளர்-

அதன் பயனாக இம்மாத இறுதிக்குள் மேற்படி நிதி இங்கு வந்து சேரலாமென எதிர்பார்ப்பதாகவும் கூறினார். (த-17)


கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன

வீடு, காணி, தளபாட

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதி, 93/7 இலக்க ஒரு பரப்புக் காணியும், வீடும், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி கல்யாணி கிறீம் ஹவுஸ் ஸ்தாபன தளபாடங்களும் விற்பனைக்குண்டு, வீட்டையும் தளபாடங்களையும் பார்வையிட்டு விலை நிர்ணயிக்கலாம். தொடர்பு:

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(25149)


## தமிழ் இசை விழா நான்காம் நாள்

யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் தமிழ் இசைவிழா நான்காம் நாள் நிகழ்ச்சிகள் இன்று இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.

நல்லூர் பண்டாரக்குளம் மருதர்வளவு விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சிகளில் அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவர்களின் பாட்டு, வயலின், வீணைக் கச்சேரிகள் இடம் பெறும். (க 111)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 10

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைமைப் பிடத் திறப்பு விழா எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4-30மணிக்கு யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி, 107 ஆம் இலக்க செயலகத்தில் நடைபெறும். (க)

## வத்திக்கானில் திருட்டு

கொழும்பு, ஏப். 10

வத்திக்கானில் உள்ள பாப்பரசரின் பத்திரிகை அலுவலகத்தினுள் புகுந்த திருடர்கள் அங்கு 3 லட்சம் லீறாக்களைத் திருடினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

புனித வார காலத்தில் நடந்த இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக வத்திக்கான் பொலீஸாரிடம் முறையிடப் பட்டுள்ளது. (த-எ)

## 5ஆயிரம் பரல் மண்எண்ணெய்

கொழும்பு, ஏப். 10

யாழ் அரச அதிபரின் கோரிக்கையின் மீதே வட பகுதிக்கு 5 ஆயிரம் பீப்பாய் மண்எண்ணெய் அனுப்பப்படுவதாக, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா கூறினார். (த-எ)

## வட்டி வீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 10

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை வங்கி சேமிப்புச் சான்றிதழ்களின் வட்டி வீதம் அதிகரிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது. (த-162)

## குறைந்த விலையில் உரம்

உடுவில், ஏப். 10

சண்டிலிப்பாய் பிரிவு விவசாய போதனாசிரியரினால் வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரத்தை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விவசாயிகளுக்கு ரி. டி. எம். உரம் குறைந்த விலையில் வழங்கப்பட உள்ளது.

மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட விவசாயிகளுக்கு இவ்வாறு உரம் வழங்கப்பட உள்ளது. (த-152)

## 3ஆவது ஆண்டு நினைவுநாள் நினைவுகள்



**செல்வி பத்மநாதன் சசிகலா**

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 09 — 06 — 1969 | 14 — 03 — 1990 |

திதி: 10 - 04 - 1993

அன்று,

அன்பாலே அணைத்து வந்தாய்
பண்பாலே உயர்ந்து சென்றாய்
உறவாலே தாங்கி நின்றாய் - ஏனோ
சொல்லாமல் துயில் கொண்டாய்.

இன்று,

பிரிவாலே வாடுகின்றோம்
நினைவாலே வாழுகின்றோம்
காணத் துடிக்கின்றோம் - அதனால்
கண்ணீரை வடிக்கின்றோம்.

அலையாக உன் நினைவுகள்
ஓயாமல் தொடர்ந்துவர
ஆண்டுகள் மூன்று
அகன்று விட்ட போதும்
ஆறாத்துயரில் - உன்னை
அன்புடன் நினைக்கின்றோம்.

உன் பிரிவால் நினைந்துருகும்

பெரியபளை, -குடும்பத்தினர்

பளை.

(25174)


"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

## யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 35 ஆவது ஆண்டு தமிழ் இசை விழா

10 - 04 - 1993 சனிக்கிழமை

நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

**மாலை 7 - 00 மணி**

அண்ணாமலை இசைக் கல்லூரி மாணவர்கள் — பாட்டு, வயலின், வீணை,

**7 - 30 மணி**

செல்வி ஹம்சானந்தி சேதுபதி - பாட்டு
செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் - வயலின்
திரு. S. துரைராசா - மிருதங்கம்

**8 - 15 — 9 - 30 மணி**

திரு. S. குமாரசாமி - பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
செல்வன் க. கண்ணதாசன் - மிருதங்கம்
செல்வன் ச. நாகராசா - கஞ்சிரா
திரு. V. தபோதநாயகம் - கடம்

இசை விழா சிறக்க வாழ்த்துவோர்:

**C. C. C.** கிளினிக்,
City Clinical Consultation
514/16, Hospital Road, Jaffna.

(வைத்திய ஆலோசனைகள் கண்வைத்திய ஆலோசனை, சிறந்த ஆய்வுகூட வசதிகளுக்கு நகரில் பிரபல நிறுவனம்.)

(சி-4819)



LUXINTENEBRIS

## JAFFNA ENGLISH ACADEMY

**ENGLISH TUTORS - IN - CHARGE**

Applications are invited from competent persons of either Sex for the above post. Candidates must be suitably qualified and experienced Teachers of English OR must have high Competency and aptitude for Teaching spoken and written English. The Tutors-In-Charge will work according to the scheme prepared by us and also be responsible for training the Students upto the levels specified by us. The selected candidates would be entitled to remunerations commensurating with their qualifications and experiences.

Formal applications with complete bio-data may be sent to us for our perusal. No personal intimations will be sent for interviews.

All candidates please call over personally at 10 a.m. on 10-04-1993 for an interview.

No personal intimations will be sent to the interviewees.

— DIRECTOR OF STUDIES.

9, Rakka Lane,
Chundikuli,
Jaffna.

(C-4860)



**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 95

மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்

**ஆரம்பம்: 10-04-1993**

எமது ஆசிரியர் குழு:

CHEMISTRY
திரு. மகாதேவா
திரு. சிவசோதி
திரு. குமரன்

PHYSICS
திரு. ரூபநாதன்

BOTANY
திரு. சதீஷ்

ZOOLOGY
திரு. அல்போன்ஸ்

PURE & APPLIED

ECONOMICS
திரு. கணேசன்

COMMERCE
திரு. வரதன்

ACCOUNTS
திரு. தேவதாஸ்

LOGIC
திரு. ஜெயராஜ்

HINDU - CIVIL.
திரு. கமலநாதன்

TAMIL
திரு திருஞானம்

GEOGRAPHY
திரு. வில்சன்

(சி-4805)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

DM றலி சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு மாலை 2-00 — 6-00 வரை பார்வையிடலாம். க. தயா, ''தமிழகம்'', லிங்கேஸ்வரன் வீதி, (சிவகுல வீதி) உரும்பராய் தெற்கு, உரும்பராய். [6105]

பிறவுண் பேட்டுக் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'', மானிப்பாய். (25144)

ஒரு வயது நிரம்பிய ஆண், பெண் நாய்களும், நான்கு மாதங்கள் நிரம்பிய வெள்ளை நிற பொமனேரியன் நாய்களும் விற்பனைக்குண்டு. J. அல்பிறெட், இல. 25, பாக் றோட், குருநகர், யாழ்ப்பாணம். (25175)

## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் அண்மையில் கொழும்புத்துறை வீதியில் 1½ பரப்புக் காணி மூன்று பக்க மதிலுடனும் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 514, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25076)

## வெளிவந்துவிட்டது

சகல A/L விஞ்ஞான பாடங்களுக்குமான கடந்த கால வினா-விடை புள்ளி விவரத்துடன் விற்பனைக்குண்டு. மேலும் விவரங்களுக்கு 'A' Level Centre, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-4720)

## 1993-94 வருஷ பலன்கள்

சைவிசேஷம் புதுவருடப் பிறப்பு கருமங்கள் தொடங்கும் முகூர்த்த வேளைகள், கைரேகை சாத்திரம் (இதயரேகையின் பலன்கள்) 14-4-93 செவ்வாய் மாற்றம் அடங்கியவை புதிய வெளியீடு ரூபா 8/50. எங்கும் விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (நூலாசிரியர், Prof: சத்தியதாஸன்) (5878)

## தேவை

வெற்று கோழித்தீன் பைகள் விலைக்கு வாங்கப்படுகிறது. ''மில்க்வைற்''. (சி-4803)

வைத்தியசாலையில் உதவியாளராகக் கடமையாற்றுவதற்கு பெண் தேவை. வயது 30—40; முடிவு 30 - 04 - 93 ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இல்லை. மெடிக்கல் கிளினிக், ஸ்ரேசன் றோட், சுன்னாகம். புகையிரத கடவைக்கு வைரவ கோவில் அருகில். (5879)

பிரெஞ்சு மொழி கற்க விரும்பும் ஒருவருக்கு அம்மொழியில் கற்பிக்கும் ஆற்றல் உள்ள ஓர் ஆசிரியர் தேவை. தொடர்பு: இ. 899, மே/பா உதயன். 6108)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்திலும் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஊக்குவிப்புப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும்: விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4583)

## PERSONAL CLASSES

Basic English, General English, Advanced English ஆரம்பம் 10-04-93 காலை 9-00 மணிக்கு. க. சபாநாயகம், இல 4, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி. [25162]

## மணமகள் தேவை

யாழ். இந்து. சுத்த சைவம் உடைய தற்பொழுது சுவிஸில் கம்பியூட்டர் எஞ்ஜினியராக கடமையாற்றும் 30 வயது மணமகனுக்கு, மணமகள் படித்தவராகவும், சைவமாகவும், குறைந்தது 5' 3'' உயரமுடையவராகவும், நற்குணம், சிவந்த நிறம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்ற ஜாதகமும் புகைப்படமும் திருப்பி அனுப்பி வைக்கப்படும். இல. 09, மே/பா உதயன் சேவை நிலையம், இல. 82, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5877)

## இலவச திருமண சேவை

27 வயது, அச்சுவினி, செவ்வாய் 2, கனடாவில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் அல்லது அழைக்கப்படும். மணமக்கள் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (25112)

## A/L மாதிரி வினாத்தாள்

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை, கணிதம் பிரிவுகளுக்கான அனைத்து பாடங்களுக்கும், மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-4582)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கான வினாத்தாள்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-4584)

## தபால்வழிக் கல்வி

பாலராசிரியராக, தபால் வழியிலும், சனி, ஞாயிறு நேரிலும் பயிற்சி பெறலாம். க.பொ.த. (சா/த) கடைசித் தகைமை. பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6106)

---

கடந்த வருடங்களைப் போல் — இம் முறையும் எமது நிறுவன மாணவர்கள் அள்ளிக் குவித்த பெறுபேறுகள் எமது ஆசிரியர் குழுவின் திறமைகளை மீண்டும் உறுதி செய்கின்றன.

எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் நாட்களில்,

**O/L** பகல்நேர, மாலைநேர DAY CLASS & EVENING CLASS

ஆண்டுகள் 4, 5, 6, 7, 8, 9, 10

(ஒவ்வொரு வகுப்பு மாணவர்களுக்கும் இலவச மாதாந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்)

**புதிய பிரிவுகள்**

ஆரம்பம்: 10 - 04 - 1993 (இன்று)

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 4887)

---

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ஆடவருக்கான சேட்டிங், சூட்டிங்,
இளநங்கையருக்கான சாறிவகைகள்
அதற்கேற்ற பிளவுஸ் வகைகள்,
ஸ்கேட் அன் பிளவுஸ்கள்,
சிறுவர்களுக்கான
உள்நாட்டு, வெளிநாட்டு ஆடைகள்

மற்றும் உங்கள் அனைத்து தேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்;

**எழினி புடைவை வாணிபம்**

மின்சார நிலைய வீதி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
குறைந்த விலையில் நிறைந்த தரம்.

(25139)

---

## A/L 95 புதிய வகுப்புகள்

ஆரம்பம் 10 - 04 - 1993
(இன்று) பி, ப. 4 - 00 மணி

கணக்கியல்:
திரு. V. உருத்திரசிங்கம்

பொருளியல்:
திரு. T. லோகநாதன்

தமிழ்:
திரு. நாகேஸ்வரன்

ஏனைய பாடங்களும் நடைபெறும்.

**அஸ்ரன் கல்வி நிலையம்**

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

(சி-4905)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி றோகினி விஸ்வலிங்கம்**

தோற்றம்: 22 — 10 — 1967
மறைவு: 15 — 03 — 1990

திதி: 10 - 04 - 1993

ஆண்டு மூன்று சென்றாலும் அழியாதுன் எண்ணங்கள்
மீண்டு வரும் பிறவியிலும் உறவாட உன்னுடன்
வேண்டுகிறோம் ஆண்டவனை - எம் அருமை கண்ணே.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

[illegible]
அத்தான், குடும்பத்தினர்.

வேளாந்தோப்பு,
கல்வியங்காடு.

(25120)

---

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மரியாம்பிள்ளை செல்வத்துரை**

(இளைப்பாறிய M. S. O. - ஒவ்வீஸர்
யாழ். தபாற்கந்தோர்)

பிறப்பு: 29 — 09 — 1913
இறப்பு; 10 — 04 — 1989

ஐயா! நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும், உங்களோடு வேலை செய்த உத்தியோகஸ்தர்கள்; நண்பர்கள் யாவரும் உங்களோடு இன்றும் அன்பாக இருக்கிறார்கள்.

உங்களின் நினைவில் வாடும்;
மனைவி - செ. பாக்கியம்,
மகள்மார் - இந்திராதேவி,
சகுந்தலாதேவி,
மகன் - அன்ரனி மரியதாஸ்.

40/5, ரெம்பிள் றோட் லேன்,
யாழ்ப்பாணம்.

(25161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர் பஜனை

தென் இந்திய திருச்சபை யாழ். திருமண்டலம் சபைகள் இணைந்து நடத்தும் ஈஸ்டர் பஜனை, ஈஸ்டர் ஞாயிறு (11-04-1993) அன்று மாலை 4 மணிக்கு மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தயாளினி தியாகராஜா,
இயக்குநர்.

சமயக் கல்விக் குழு
தென் இந்திய திருச்சபை.

(25179)


## செயலகத்தில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 10

இராணுவ நடவடிக்கைகளினால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், காயம் அடைந்தவர்களுக்கும் நேற்று யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் வைத்து கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுச் சென்றனர்.

(ஓ-100)


## கிரிக்கெட்

புதிய ஆங்கில அக்கடமியின் ஆதரவுடன் "செடின்ஸ்" விளையாட்டுக் கழகத்தினர் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 25 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முடிவு திகதி: **17 – 04 – 1993**

தொடர்பு:-

**புதிய ஆங்கிலக் கல்வி நிலையம்,**
82, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

(சி-4914)


# UNIVERSITY OF JAFFNA

## EXTERNAL DEGREE PROGRAMME 1991/1992

### FIRST IN ARTS / FIRST IN COMMERCE, GENERAL ARTS PART-I, AND COMMERCE PART-I

### ORIENTATION COURSE - I

## TIME - TABLE APRIL - 1993

| TIME | APRIL 19th | APRIL 20th | APRIL 21st | APRIL 22nd | APRIL 23rd |
|---|---|---|---|---|---|
| 8 – 9 | Sanskrit 1.1 | Christian Civilization 1.1 | Accounts 1.1 | History 1.1 | Drama & Theatre Arts 1.1 |
| 9 – 10 | Sanskrit 1.2 | Christian Civilization 1.2 | Accounts 1.2 | History 1.2 | Drama & Theatre Arts 1.2 |
| 10 – 11 | English Literature 1.1 | Linguistics 1.1 | Communication Studies | Tamil 1.1 | Contemporary Affairs |
| 11 – 12 | English Literature 1.2 | Linguistics 1.2 | Communication Studies | Tamil 1.2 | Contemporary Affairs |
| 1 – 2 | Population Studies | Social Psychology | Fine Arts 1.1 | Geography 1.1 | Sri Lankan Studies |
| 2 – 3 | Population Studies | Social Psychology | Fine Arts 1.2 | Geography 1.2 | Sri Lankan Studies |
| 3 – 4 | | | | | |

| TIME | APRIL 26th | APRIL 27th | APRIL 28th | APRIL 29th | APRIL 30th |
|---|---|---|---|---|---|
| 8 – 9 | Management Fine Arts FAG 2.1 | Commerce 1.1 Fine Arts FAG 2.2 | Hindu Civilization 1.1 Linguistics LG 2.2 | Maths Commerce 2.5B English Literature ENG 2.2 | Drama & Theatre 2.1 DTG |
| 9 – 10 | Management Christian Civilization CCG 2.1 | Commerce 1.2 Christian Civilization CCG 2.2 | Hindu Civilization 1.2 Economics ECN 2.1 | Maths Political Science PG 2.1 | Economics ECNG 2.2 |
| 10 – 11 | Political Science Geography GYG 2.1 | Philosophy 1.1 Linguistics LG 2.1 | Economics (Arts) 1.1 Commerce (Com) 2.2, 2.3 | E. S L. Hindu Civilization HCG 2.1 | Drama & Theatre DTG 2.2 |
| 11 – 12 | Political Science Tamil TG 2.1 | Philosophy 1.2 Philosophy PHYG 2.1 | Economics (Arts) 1.2 Economics ECN 2.2 | E. S. L. Political Science PG 2.2 | |
| 1 – 2 | Logic & Scientific Method Geography GYG 2.2 | Economics (Com) 1.1 English Literature ENG | Environmental Studies Commerce (Com) 2.4 Sanskrit SKTG 2.2 | Hindu Civilization HCG 2.2 | E. S. L |
| 2 – 3 | Logic Commerce COM 2.1 | Economics (Com) 1.2 Philosophy PHYG 2.2 | Enviromental Studies History HG 2.1 | Economics ECNG 2.1 | E. S. L. |
| 3 – 4 | Tamil TG 2.2 | Commerce COM 2.2 | Commerce COM 2.5A COM 2.1 | History HG 2.2 | E. S. L. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரார் பியூப்பில் அக்கடமி

கல்வியங்காடு

புதிய பிரிவு

விசேட ஆங்கில வகுப்பு (பேச்சு)

Mr. A. REGINALD
(Dip. in Eng.)

(25187)



க. பொ. த (உயர்தர) கிறிஸ்தவப் பாடம்

# கருத்தரங்கு

க. பொ. த [உயர்தர] கிறிஸ்தவ பாடக் கருத்தரங்குகள் ஏப்ரல் 12 [திங்கள்], 16, [வெள்ளி], 19 [திங்கள்], 23 [வெள்ளி] ஆகிய திகதிகளில் பி. ப. 2-00 மணி தொடக்கம் 5-00 மணிவரை உடுவில் மகளிர் கல்லூரியில் நடத்தப்படும். கிறிஸ்தவம் பயிலும் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

விரிவுரையாளர்கள்:

புதிய ஏற்பாட்டுப் பிரிவு - அருட்திரு. டீ. எஸ். தியாகராஜா

பழைய ஏற்பாட்டுப் பிரிவு - அருட்திரு. எஸ். பீ. நேசகுமார்

திருச்சபைச் சரித்திரம் - அருட்திரு ஏ. ஏ. போல்

திருமதி தயாளினி தியாகராஜா,
இயக்குனர்
சமயக் கல்விக் குழு,
தென் இந்திய திருச்சபை.

[25180]



இன்று நேற்றல்ல!

கடந்த 15 வருடங்களாக கலை, வர்த்தகத் துறையில் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்!

## A/L 95 கலை, வர்த்தகம்

இன்று ஆரம்பம் - 10 மணி

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4912)


# இன்று

சென்ற ஆண்டு அக்டோபர் மாதம் நியமனம் பெற்ற சகல பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் ஒன்று கூடலும் இன்று காலை 10 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும். (க)

o o o

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் வழங்கும் உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை இன்று மாலை 4.30 மணிக்கு சுண்டுக்குளி புனிதயோவான் ஸ்நானகன் தேவாலயத்தில் நடைபெறும். (க)

o o o

உரும்பராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொருட்காட்சியும் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் நடைபெறும். (க-154)

# நாளை

யாழ்ப்பாணம், ஏப். 10

பண்டத்தரிப்புக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழகத்தின் கொத்தணி மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு காலை 9-30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

o o o

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சமாசத்தின் விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல், நுகர்ச்சி ஆகிய செயற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று, நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள சமாச மண்டபத்தில் நடைபெறும். (க-162)

o o o

ஹோமியோபதி வைத்தியத்துறையின் தந்தை டாக்டர் சாமுவேல் ஹனிமனின் 238ஆவது பிறந்த நாள் ஞாபகார்த்த விழா இலங்கை ஹோமியோபதி சங்கத்தின்ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் வீதி 35 ஆம் இலக்க இல்ல மண்டபத்தில் நடைபெறும். (க-51)

# பாடசாலைகளில்

கரவெட்டி கிழக்கு யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தின் பொன் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய அரங்கில் அதிபர் திரு. வ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

பொன் விழாவை ஒட்டி மலர் வெளியீடும் சிறப்புரைகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க)

o o o

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தின் கலை விழா இன்று சனி பிற்பகல் 5 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். (த)

# மெய்ஞ்ஞான விரிவுரைகள்

வட்டுக்கோட்டை, ஏப். 10

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள இரண்டு ஆலயங்களில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மெய்ஞ்ஞான விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன.

சைவமணி சின்னையா இரட்ணராசா சித்தன்கேணி சிவன் கோவிலில் காலை 9 மணி முதல் 10 மணி வரை ''திருமந்திர விளக்கம்'' என்னும் பொருளிலும், அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவிலில் பி. ப. 3 மணி முதல் 4 மணி வரையும் ''பரிணாம வளர்ச்சி'' (பகவத் கீதை சம்பந்தப்பட்ட விளக்கம்) என்னும் பொருளிலும் உரையாற்றி வருகிறார். இவ் வருட இறுதி வரை இத்தொடர் சொற்பொழிவுகள் இடம்பெறும். பிரஸ்தாப விரிவுரைகளைத் தொடர்ந்து இரண்டு ஆலயங்களிலும் தியானப் பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றன. (அ)


# குகன் கல்வி நிறுவனம்

ஆவரங்கால்.

## A/L 95 கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: 10-04-1993
(இன்று) பி. ப. 2-30

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. லோகலிங்கம் |
| கணக்கியல் | — | திரு. S K. பிரபாகரன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| வர்த்தகம் | — | திரு. S. K. சோதிலிங்கம் |
| இந்துநாகரிகம் | — | திரு. ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | திரு. சிவலிங்கம் |
| | — | திரு. அமரசிவம் |
| புவியியல் | — | திரு. கந்தசாமி |
| | — | திரு. கிருஷ்ணராசா |
| வரலாறு | — | திருமதி சுரேந்தினி |

(25177)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 24 | 25 |
| 07 | 02 |
| 1971 | 1993 |

25 - 02 - 93 இல் அகால மரணமடைந்த

### செல்வி மகேந்தினி மகேந்திரன்
(சுதா)

நாற்பத்தைந்தாம் நாள் முடிந்ததம்மா
இல்லமே இருண்டதம்மா - ஆனால்
எம்மிதயம் இருக்கும் வரை - உன்
நினைவு மாறாதம்மா.

மு. மகேந்திரன் குடும்பத்தினர்.
(ஓட்டுமடம்)

அளவெட்டி.

(6109)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 17 | 26 |
| 08 | 02 |
| 1975 | 1993 |

### சிவபாதசுந்தரம் சிவநீதன் (சபேஸ்)

அன்னாரின் ஈமக்கிரியைகளில் பங்குகொண்டு ஆறுதல் கூறிய, உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10-04-93)சனிக்கிழமை கோம்பயன்மணலிலும், சபிண்டீகரணம் 11-04-93 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தங்கள் அனைவரையும் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்,

தாய், தந்தை, சகோதரர்கள்.

496, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(25178)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 21 | 25 |
| 03 | 02 |
| 1923 | 1993 |

தெல்லிப்பழை மட்டுவிலைச் சேர்ந்த
திடீர் மரண விசாரணை அதிகாரியும்,
சமாதான நீதிவானுமாகிய

அமரர்

### நாகலிங்கம் தம்பிராசா J.P.

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்தீர்கள், அனைவருடனும் அன்போடும், பண்போடும் பாசத்தோடும் பழகிப் பெருமை கொண்டீர்கள், அன்புடனே எமை வளர்த்து வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

27 - 3 - 93இல் கொழும்பில் நடைபெற்ற மரணச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், செய்திகள் தெரிவித்தவர்களுக்கும், 14 - 3 - 93இல் உதயன் அறிவித்தலின்படி சுன்னாகத்தில் வந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், சகல வகைகளிலும் வேண்டிய உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்

நன்றி

திருமதி சிவபாக்கியம் தம்பிராசாவும்,
குடும்பத்தினரும்

39 'A' அப்பொன்சு அவன்யூ.
தெகிவளை.

(25184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலவீனம் யாருக்கு...?

தென்னிலங்கையில் உள்ள ஏழு மாகாண சபைகளுக்குமான தேர்தல் மே மாதம் 17ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆளுங்கட்சியான ஐ. தே. கட்சிக்கு தேர்தல் வெற்றி வாய்ப்புகள் எதிர்பார்த்ததைவிட மந்தமாக இருக்கின்றன. அதனால் மாகாண சபைகள் கலைக்கப்பட்டாலும் தேர்தல் நடைபெறாது என்று அரசியல் அவதானிகள் ஊகம் தெரிவித்திருந்தனர். எனினும் தேர்தலுக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது.

தேர்தல் வேளையில் குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு பாதுகாப்புப் படையினர் ஆயத்தம் செய்வதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நலின் அங்கம்மன வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்ட தகவல்கள் அதனை ஊர்ஜிதம் செய்கின்றன.

தெற்கில் தேர்தல் நடைபெறுவதற்கும் வடக்கில் தாக்குதல்களை தீவிரப்படுத்துவதற்கும் தொடர்பு என்ன?

கிழக்கில் அரசாங்கம் — அதாவது படைகள் — பலமான நிலையில் இருப்பதாக சிங்கள மக்களுக்குக் காட்டப்பட்டுள்ளது. அவ்வாறு கூறிக்கொண்டே விடுதலைப் புலிகளை விரட்டுவதற்காக பெரிய அளவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகக் கூறி அவற்றை அடிக்கடி நடத்தி வருகின்றனர் அரச படையினர். தாக்குதல்கள் பெரும் பிரசாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டனவே அன்றி அவை வெற்றி அளித்ததில்லை.

கடந்த மாதத்திலும் ஆகா, ஓகோ என்று கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட இருபெரும் இராணுவத் தாக்குதல்கள் பிசுபிசுத்துவிட்டன. பிரசித்தம் கொடுக்கப்பட்ட அளவுக்கு வெற்றி அடையவில்லை. அந்தத் தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாத நிலையில். வெளியில் கூறமுடியாத வெட்கத்தில் விடுதலைப் புலிகள் கிழக்கில் இருந்து வடக்கே அணி திரள்கிறார்கள் என்று இராணுவ உயர் அதிகாரிகள் சிங்களவர்களுக்கு ஓவியம் கீறிக்காட்டுகிறார்கள்!

கிழக்கில் விடுதலைப் புலிகளை முற்றாகத் துடைத்து எறிந்து விடுகிறோம்; இதோ பாரிய தாக்குதல்கள் என்றும் —

வடக்கில் புலிகளை தாக்கிப் பலவீனப்படுத்த, இதோ! பெரும் இராணுவ நடவடிக்கைகள் என்றும் —

மாறி மாறி ''சூக்'' காட்டி வருவதிலிருந்தே இரண்டு பிரதேசங்களிலும் இராணுவத்தினர் புலிகளை வெல்ல முடியாதிருக்கிறார்கள் என்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்தார்களோ என்னவோ? புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை! சிங்கள மக்களின் இந்தப் புத்திப் பலவீனத்தை தக்கவாறு தனது அரசியல் வெற்றிக்குப் பயன்படுத்த அரசு திட்டமிட்டிருக்கிறது. அதன் விளைவு தான் தேர்தல் வேளையில் வடக்கில் பாரிய தாக்குதல் என்ற முஸ்தீபு!

கிழக்கில் புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டோம்; வடக்கிலும் பலவீனப்படுத்தி விட்டால் சிங்களவர்களுக்குச் சாதகமாகத் தயாரித்து வைத்திருக்கும் தெரிவுக் குழுவின் தீர்வை இலகுவில் தமிழர்கள் மீது திணித்து விடுவோம் என்று காட்டி ஆளுங்கட்சிக்கு வாக்குப் பலம் தேடும் தந்திரம் இது. பாவம்! சிங்கள வாக்காளர்களுக்கு இது எங்கே விளங்கப் போகிறது!! அவர்களுக்கு அந்தளவுக்குப் புத்திக் கூர்மை இருப்பதாகத் தெரியவில்லை. சிங்களப் பொது மக்களின் அறிவுப் பலவீனத்தை ஆளுங்கட்சி வாங்கிக் கொள்ளலாம். ஆனால் தமிழர்களைப் பலவீனப்படுத்த முடியாது! வாங்கவும் முடியாது!

## மேற்குவங்க சூறாவளியில் 100 பேர் சாவு

புதுடில்லி, ஏப் 10

மேற்கு வங்காளத்தில் நேற்று வீசிய சூறாவளியில் ஆறு கிராமங்களைச் சேர்ந்த — நூற்றுக்கும் அதிகமானோர் — உயிரிழந்தனர். இருநூறு பேர் வரை படுகாயமடைந்தனர்.

உயிரிழந்த மற்றும் படுகாயமடைந்த பொதுமக்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக் கூடும் என அஞ்சப்பட்டது. (உ)

# இந்தியாவில் மனித உரிமை மீறல்கள்; விசாரணை நடத்த அனுமதிக்குக!

## சர்வதேச மன்னிப்புச் சபை கோருகிறது

லண்டன், ஏப். 10

இந்தியா மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து விரிவான விசாரணை நடத்த அனுமதியளிக்குமாறு இந்திய அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

இதற்காக இந்தியாவுக்கு விஜயம் செய்ய அனுமதி வழங்குமாறும் மன்னிப்புச் சபை இந்திய அரசைக் கோரியுள்ளது

இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் பொலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் சித்திரவதைக்குள்ளாவதும் மரணம் அடைவதும் தினசரி இடம்பெறும் சம்பவங்களாகிவிட்டன என்றும் மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஏனைய மாநிலங்களில் நடைபெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரிப்பதற்கு முன்னர், காஷ்மீர் மாநிலத்துக்குச் சென்று அங்கு விசாரணை நடத்த தம்மை முதலில் அனுமதிக்கும்படியும் மன்னிப்புச் சபை, புதுடில்லி அரசாங்கத்தை கேட்டுள்ளது.

அண்மையில் பம்பாயில் இடம்பெற்ற இந்து - முஸ்லிம் கலவரத்தைத் தொடர்ந்து, அங்கு சென்று நேரில் விசாரணை நடத்த அனுமதிகோரி சமர்ப்பித்த தமது விண்ணப்பத்தை இந்திய அரசு நிராகரித்த சம்பவத்தையும் மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

1979 முதல் இந்தியாவுக்கு விஜயம் செய்ய சர்வதேச மன்னிப்புச் சபைக்கு இந்திய அரசு அனுமதி மறுத்து வருவது தெரிந்ததே. (ஒ எ)

## யாழ். பல்கலைக்கு ரூ.30 லட்சத்துக்கு கம்பியூட்டர்

யாழ்ப்பாணம், ஏப். 10

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் நடப்பு ஆண்டில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு கம்பியூட்டர்கள் கொள்வனவு செய்ய 30 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் இந்த ஒதுக்கீட்டைச் செய்துள்ளதாக யாழ் செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒதுக்கீடுமூலம் கொள்வனவு செய்யப்படும் கம்பியூட்டர்களைப் பயன்படுத்தி யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் வவுச்சர்களைத் தயாரிக்கும் வேலைகளை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 10

உயிர்த்த ஞாயிறு தினத்தை ஒட்டி பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் குருநகர் விளையாட்டு மைதானத்தில் நாளை பிற்பகல் 3 மணி முதல் காட்சி உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பாடும்மீன் 'பி' அணி எதிர் யாழ் - பல்கலைக் கழக அணி

★ யங்றோயல் அணி எதிர் ஸ்ரீமுருகன் அணி

★ பாடும்மீன் ''ஏ'' அணி எதிர் சென். அன்ரனிஸ் 'ஏ' அணி (உ-51)

★ ★ ★

உயிர்த்த ஞாயிறு தினத்தை ஒட்டி ஈச்சமோட்டை விளையாட்டுக் கழகம் நடத்தும் 52 ஆவது வருடாந்த மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளை காலை 10 மணிக்கு ஈச்சமோட்டை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

1942 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் நடைபெற்று வருவது போன்று இம்முறையும் மணமானவர்கள் அணிக்கும் மணமாகாதவர்கள் அணிக்கும் இடையில் கிரிக்கெட் ஆட்டம் நடைபெறும்.

★ ★ ★

புதுவருட தினத்தை ஒட்டி நல்லூர் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவிருக்கின்றன.

★ நாளை காலை 8.00 மணிக்கு முத்துத்தம்பி மத்திய மகாவித்தியாலயத்தில் தாச்சிப் போட்டி இடம்பெறும்.

★ நாளை காலை 8.00 மணிக்கு முடமாவடி ஞானவரவர் கோவிலடி மைதானத்தில் கரப்பந்தாட்டப் போட்டி ஆரம்பமாகும் இப் போட்டி தொடர்ந்து திங்கட்கிழமையன்றும் நடைபெறும்.

★ திங்கள் காலை முத்துத்தம்பி மகாவித்தியாலத்தில் வலைப்பந்தாட்டப் போட்டி இடம்பெறும்.

★ செவ்வாயன்று காலை கோண்டாவில் குமரன் விளையாட்டு கழக மைதானத்தில் "எல்லே" விளையாட்டுப் போட்டி இடம்பெறும்.

★ வியாழனன்று முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் கயிறு இழுத்தல் போட்டி நடைபெறும். (உ-143)

★ ★ ★

மயிலணி, ஏப். 10

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியை எதிர்த்து மல்லாகம் ஜொலி போய்ஸ் அணி மோதும். (உ-89)

## சமாதான நீதிவான்களாக பதிவாளர்களுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஏப். 10

பதிவாளர்களுக்கு சமாதான நீதிவான் நியமனமும் வழங்கப்படவிருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் தோறும் தற்பொழுது பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவாளர்களாகப் பணிபுரிபவர்களுக்கே இந்தப் புதிய நியமனங்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள பதிவாளர்களின் விவரங்களை உடன் திரட்டி அனுப்புமாறு நீதி அமைச்சு, யாழ். மாவட்டப் பதிவாளரைக் கேட்டுள்ளது. (ஒ-100)

## போதியளவு எக்ஸ்றே பிலிம் இம்முறையும் வரவில்லை

யாழ். போதனா வைத்தியசாலையின் எக்ஸ்றே பிரிவுக்கு இம்முறையும் குறைந்தளவு எக்ஸ்றே பிலிம்களே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பருத்தித்துறைக்கு வந்த குமண கப்பலில் 3 வாரங்களுக்கும் குறைவாக பயன்படுத்தக்கூடிய பிலிம்களே எடுத்துவரப்பட்டுள்ளன. இது கடந்த தடவை அனுப்பப்பட்ட கால் பங்கினதாகும். ஆனால் எக்ஸ்றே பிரிவு 3 மாத தேவையை சமாளிக்க வேண்டிய நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

எவ்வளவு தான் சிக்கனமாகப் பாவித்தாலும் இந்த பிலிம்களை 3 வாரங்களுக்குக் கூடப் பாவிக்க முடியாது என்றும் —

எனவே வழமையான கிளினிக் நோயாளர்களை எக்ஸ்றே எடுப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, அவசர நோயாளர்களுக்கு மட்டும் எக்ஸ்றே எடுக்கும் பணி நடைபெறும் என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-15)

## போதைவஸ்து கடத்தல்; முக்கிய நபர் கைதானார்

கொழும்பு, ஏப். 10

2 கோடி ரூபா பெறுமதியான 10 கிலோவுக்கு கூடுதலான ஹெரோயின் போதைவஸ்துவை வைத்திருந்த ஒரு நபரை அவரது களுபோவில இல்லத்தில் வைத்து போதைத் தடுப்பு பொலீஸ் பணியகத்தினர் கைது செய்தனர்.

இலங்கையில் போதைவஸ்துக் கடத்தலில் முன்னணி வகிப்பவர் எனக் கருதப்படும் இந்நபரை பத்து ஆண்டுகளாகப் பொலீஸார் கண்காணித்து வந்தனராம்.

இந்நபர் கொழும்பில் மோட்டார் உதிரிப்பாகக் கடை ஒன்றையும் நகைக்கடை ஒன்றையும் வைத்திருக்கிறார். களுபோவில, மாளிகாவத்தை ஆகிய இடங்களில் இவருக்கு இரண்டு வீடுகள் உள்ளன. மருதானையிலும் சில கட்டடங்களை இவர் வாடகைக்கு அமர்த்தியிருக்கின்றார்.

போதைவஸ்துக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் இவருக்குச் சொந்தமான இரண்டு வாகனங்களும் கைப்பற்றப்பட்டன. (ஒ எ)

### இலங்கையில் இதுவரையும்

# 72 பேருக்கு எய்ட்ஸ் வைரஸ் பீடிப்பு! இறந்தவர் எண்ணிக்கை இருபது!!

## சுகாதாரக் கருத்தரங்கில் உரை

வண்ணார்பண்ணை, ஏப். 10

இலங்கையில் இதுவரை 72 பேர் எய்ட்ஸ் நோய்க்கான எச். ஐ. வி. வைரஸினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது இவர்களில் 34 பேர் எய்ட்ஸ் நோயாளராகி பின்னர் அவர்களில் 20 பேர் இறந்து விட்டனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரன். கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வட. இலங்கை மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வண்ணை மேற்கு தனியார் மருத்துவமனையில் நடைபெற்ற ''எய்ட்ஸ்'' பற்றிய கருத்தரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது;

இந்தியாவில் 1991 ஆம் ஆண்டில் 5 லட்சம் பேர் எச். ஐ. வி. வைரஸினால் பீடிக்கப்பட்டிருந்தனர். 1992 இல் ஓராண்டு கால இடைவெளியில் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்தது.

1986 ஆம் ஆண்டில் இந்தியாவிலுள்ள 8 மாநிலங்களில் மாத்திரம் எய்ட்ஸ் நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். தற்போது 21 மாநிலங்களில் இந்நோயாளர்கள் இருப்பது இனங்காணப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் 5 லட்சம் எய்ட்ஸ் நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர். இதே போன்று மூன்று மடங்கினர் இனங்காணப்படாத நிலையில் உள்ளனர். எச்.ஐ. வி. வைரஸ் கிருமியினால் பீடிக்கப்பட்டு ஒரு கோடி பேர் தற்போது நோய்க் காவிகளாக இருக்கின்றனர். இந்நிலை தொடருமானால் 2 ஆயிரம் ஆண்டளவில் 2 கோடி பேர் எய்ட்ஸ் நோயாளிகளாகவும், 4 கோடி பேர் எச்.ஐ.வி. வைரஸ் கிருமி [illegible] வும் இருப்பர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

15 வயதிற்கும், 45 வயதிற்கும் இடைப்பட்ட திருமணமான தாய்மார்கள் 1 லட்சம் பேரில் 60 பேர் என்ற விகிதத்தில் எச். ஐ. வி. வைரஸ் பீடித்திருக்கின்றன. ஆகக் கூடுதலாக ஆபிரிக்காக் கண்டத்திலும் குறைவாக கிழக்கு ஐரோப்பாவிலும் இவ்வாறு காணப்படுகின்றது.

எச். ஐ. வி. கிருமியானது குழந்தைகள், சிறுபிள்ளைகளுக்கு தாய்மாரினால் தொற்றுவதில் ஆபிரிக்காவில் 3 லட்சம் சிறுபிள்ளைகளுக்கு இந்நோய் தொற்று இருப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. எதிர்வரும் 10 வருடங்களில் 27 லட்சம் சிறு பிள்ளைகளுக்கு இந்நோய் தொற்றியிருக்கும்

அமெரிக்கா கண்டத்தில் எய்ட்ஸ் நோய்க்கான வைரஸ் எச். ஐ. வி. ஒரு வகை காணப்படுகிறது. ஆபிரிக்கா, ஆசியாக் கண்டங்களில் எச்.ஐ.வி. இரண்டு வகை இனங்கள் காணப்படுகின்றன.

இதனால் இந்நோய்க்கான மாற்று மருந்து கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. — என்றார். (உ-162)

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 10

வட - இலங்கை சுதேசிய மருத்துவசபை கடந்த டிசம்பர் மாதம் நடத்திய சித்த ஆயுள்வேத இறுதிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சித்தியடைந்த பரீட்சார்த்திகள் விவரம் வருமாறு:-

செல்வி நந்தினிதேவி செல்லையா, செல்வி திரேசா அன்ரனிற்றா யோசப், திருமதி தனபாக்கியம் கணேசமூர்த்தி, செல்வி ராதா கந்தையா, செல்வி நல்லதம்பி சந்திரமணி.

திரு நடராஜா ஜெயராஜா, செல்வி வளர்மதி வடிவேல், திரு. விநாயகமூர்த்தி தவகுமார், திரு. துரைசிங்கம், செல்வி இந்திராணி சந்தானந்தம்.

திரு. கே. நடராஜா, ஜனாப் எம். ஐ. ஆதம் லெவ்வை. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

சுழிபுரம் மேற்கு சுழிபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியம் 07-04-1993இல் அகால மரணமானார். இறுதிக் கிரியைகள் 08-04-1993 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. பொன்னையா

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (25181)

### கதிர்காமு தருமலிங்கம்

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு தருமலிங்கம் அவர்கள் (09-04-93) வெள்ளிக்கிழமை காலை காலமாகிவிட்டார். அன்னார் இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், யோகமலர் (கனடா), கைலைநாதன் (கனடா), சுபாஸ்கரன் (கனடா), மாலினி (கனடா), இராமபாலன் (ஜேர்மனி), மகேந்திரன் (கனடா), விஜேந்திரன் (ஜேர்மனி), அன்னலட்சுமி, திருமகள், கனிமொழி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன் (கனடா), பரமானந்தன் (கனடா), சுபாஜினி (கனடா), சந்தானந்ததேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிசங்கர், சிந்துஜன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, தனபாலசிங்கம், சரசுவதி மற்றும் அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (10-04-93) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

உரும்பராய் கிழக்கு.
[25176]

### மாணிக்கம் பாலசுப்பிரமணியம்

வண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் நாயன்மார் வீதியில் வசித்தவருமாகிய முன்னாள் புகையிரத நிலைய அதிபர் மாணிக்கம் பாலசுப்பிரமணியம் 9-4-1993 காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - பாலாம்பிகை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ராதா, ரஞ்சித் [லண்டன்], ராஜேந்திரா [முன்னாள் விற்பனைத் திணைக்கள ஊழியர்] ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயமணியின் [லண்டன்] அன்பு மாமனாரும், லக்ஷனாவின் [லண்டன்] அன்புப் பேரனும், காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி வைத்தீஸ்வரனின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை [11-4-93] ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
பா. ராஜேந்திரா (மகன்)

77, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (25182)

### சடாட்சரஐயர் இரங்கராஜன்

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாக கொண்டவரும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமான சடாட்சரஐயர் இரங்கராஜன் 9-4-93 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னார் சடாட்சரஐயர் அவர்களின் அன்பு மகனும், பாலசரஸ்வதியின் அன்புக் கணவரும், சௌந்தரநாயகி, ஸ்ரீதரன், இராதாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரவிந்தன், இந்துஸா, ஐங்கரன், ஆனந்தபாபு ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

ஈமக்கிரியைகள் ஆனைக்கோட்டை பழம் றோட்டில் உள்ள இல்லத்தில் இன்று (10-4-93) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரையாம்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
கோ. சிவகுமார சர்மா

(25190)

### திருமதி மதுரம் நடராஜா
(பபா அக்கா)

திருமதி மதுரம் நடராஜா சுண்டிக்குளியில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற T.C நடராஜா அவர்களின் மனைவியும், சோதியின் சிறியதாயரும், பொன்னுச்சாமியின் மாமியாரும், கமலநாதன் அவர்களின் வளர்ப்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களாகிய புனிதம், சிவஞானம், ஜெயரட்டினம், அருளானந்தம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 9 மணியளவில் துண்டி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி சை ஜெயரத்தினம்
ஆசிரியை
(யா, கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலயம்)

107/11 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி. (6110)

பிரபல சந்தனமரக் கடத்தல்காரனான

# வீரப்பனைப் பிடிக்கச் சென்ற குழு கண்ணிவெடியில் சிக்கியது

## கொமாண்டோக்கள் உட்பட 22 பேர் உடல் சிதறிப் பலி!

சென்னை, ஏப். 10

பிரபல சந்தனமரக் கடத்தல் காரனான வீரப்பனைப் பிடிக்கச்சென்ற சிறப்புப் பொலீஸ் கொமாண்டோ படையைச் சேர்ந்த பல பொலீஸார் உட்பட 22 பேர் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் உயிரிழந்தனர் என அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு, பாலாறு காவல் சாவடிக்கு அருகே இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது.

அச்சம்பவத்தில் 10பொலீஸ் கொமாண்டோக்கள் உட்பட 30 பேர் படுகாயமடைந்தனர்.

வீரப்பனைப் பிடிப்பதற்காக அமைக்கப்பட்ட தமிழ்நாடு — கர்நாடகக் கூட்டுச் சிறப்பு பொலீஸ் கொமாண்டோப்படையில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 30 கொமாண்டோக்கள் பொலீஸ் கண்காணிப்பாளர் திரு. கோபாலகிருஷ்ணன் தலைமையின் நேற்று கர்நாடக எல்லைப் பகுதிக்கு விரைந்தனர்.

கர்நாடக எல்லைப் பகுதியில் வீரப்பன் காணப்பட்டதாகக் கிடைத்த ஒரு தகவலைத் தொடர்ந்தே கொமொண்டோக்கள் இத் திடீர்ப் பயணத்தை மேற்கொண்டனர் என்றும்—

இக்குழுவினர் தமது வாகனத்தில் இருந்து இறங்க முற்பட்டபோது இந்த நிலக்கண்ணித் தாக்குதல் இடம்பெற்றதாகவும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### பலத்த காயம்

திரு. கோபாலகிருஷ்ணனுக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டன.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் அடையாளம் காணமுடியாதபடி துண்டுகளாக பிய்ந்து போயின என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களில் 15 பேர் தொழிலாளர்களும் பொலீஸுக்கு தகவல் தெரிவிப்பவர்களும் என்றும்—

5 பேர் பொலீஸ் கொமாண்டோக்கள் என்றும் இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

ஆனால் நேற்று மாலை இந்திய வானொலி வெளியிட்ட செய்தியில் உயிரிழந்தவர்களில் 15 பேர் பொலீஸ் கொமாண்டோ படையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் இருபதுக்கும் அதிக பொலீஸார் உயிரிழந்ததாக பி. பி. ஸி. அறிவித்தது.

தமிழ்நாடு மாநில பொலீஸ் தலைமை இயக்குநர் எஸ். ஸ்ரீபால், சிறப்புப் படைக்குத் தலைமை வகிக்கும் மேலதிக பொலீஸ் இயக்குநர் வால்டர் தேவாரம் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்றனர்.

உயிரிழந்த குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

காயமடைந்தவர்களின் மருத்துவ சிகிச்சைக்கு என்று ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபாவும் திரு. கோபாலகிருஷ்ணனின் மருத்துவ சிகிச்சைக்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்களை நேரிற் பார்த்து ஆறுதல் கூறுவதற்காக ஜெயலலிதா இன்று விமானம் மூலம் சேலம் செல்வார் என்றும் அறிவிக்கப்பட்டது.

### ஈழத்தமிழ்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதற்கு ஜேர்மனி, பிரிட்டன், சுவிஸ், நோர்வே ஆகிய நாடுகளின் தூதுவர்கள் விருப்பம் கொண்டுள்ளதாகவும் —

இங்கு வரமுடியாமல் அரசு போடும் தடங்கல்களைத்தமது நாடுகளின் அரசுகள் ஊடாக நீக்க முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டு வருவதாகவும் — நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை மேற்கண்ட நாடுகளின் தூதுவர்கள் இப்போது யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லும் சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் இருந்தும், மதகுருமாரிடமும் இருந்தும் யாழ். குடாநாட்டின் இன்றைய நிலையை விசாரித்து வருவதாகவும் உதயனுக்குத் தெரியவந்துள்ளது.

இவர்கள், உலகத் திருச்சபையின் பிரதிநிதியாக விளங்கும் அங்கிலிக்கன் ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ விடமும் யாழ் நிலைமையைக் கேட்டறிந்ததாகவும் அறியப்படுகிறது.

[அ - 3]

உ

## திறப்பு விழா அழைப்பு

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 28ஆம் திகதி இன்று (10-04-1993) சனிக்கிழமை காலை 7-06 மணி தொடக்கம் 8-06 மணிவரையுள்ள சுபவேளையில்,

★ மதுரா பட்டு மகால் ★
MATHUTA SILKS

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் தாங்களும் சமுகம் தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மங்கள விளக்கேற்றி திறந்து வைப்பவர்:
சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்கள்

தங்கள் நல்வரவை நாடும்;
சோபனா ஆடை அக நிர்வாகத்தினர்.

மதுரா பட்டு மகால்,
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம். (சி-4910)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி
### கணபதிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை
(நெடுந்தீவு)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் புறாடி ஒழுங்கை அரியாலையில் வசித்துவந்தவருமாகிய கணபதிப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை காலமானார். இவர் ஓய்வுபெற்று காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (வெள்ளைத்தம்பி)யின் அன்பு மனைவியும் தனபாக்கியம், சரஸ்வதி, கனகலிங்கம் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை கச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நாகேந்திரர் (லிகிதர்), புவனேஸ்வரராஜா (கிராம அலுவலர் உடுவில்), வனஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்திரவதனி, மனோகரநாயகம் (ஜேர்மனி), பாஸ்கரன் (லண்டன்), சாந்தவதனி, கமலவதனி, பகீரதி, பகீரதன் (லண்டன்), விக்கினேஸ்வரி, விக்னேஸ்வரன், பாஸ்கரி, துஷ்யந்தன், துசிதா, சசிதா, பிரியதர்சன், ஜனனி ஆகியோரின் பேத்தியும், மனோஜா, பவிதா நிரோஜா (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10-04-1993) சனிக்கிழமை மாலை 4 00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பொ. புவனேஸ்வரராஜா (P. P)
(மருமகன்)

36, புறாடி ஒழுங்கை,
அரியாலை மேற்கு (25186)

### இராசையா தனுசன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தனுசன் காலமானார்.

இவர் இராசையா (இந்திரா எஞ்சினியர் உழவு இயந்திர திருத்துனர்), வசந்தி ஆகியோரின் அன்பு மகனும், சைலஜாவின் அன்புத் தம்பியும், மயில்வாகனம் மகேஸ்வரி, பரமகுருநாதர் இராசேஸ்வரி ஆகியோரின் பேரனும், மகாதேவன் (பிரான்ஸ்), பற்குணம் (பிரான்ஸ்), பாஸ்கரன் (மருத்துவபீட மாணவன் யாழ். பல்கலைக் கழகம்), இராசேஸ்வரி கனகராசா (யாழ் போதனா வைத்தியசாலை), பரமேஸ்வரி, குணம் (ஈழநாதம்). ஆகியோரின் மருமகனும் ஜீவானந்தம், நாகபூஷணி, சிவா [பிரான்ஸ்] ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [10-4-93] காலை 10 மணிக்கு செம்மணி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
இராசையா [மயிலு]

இல 30/13, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர். [25189]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292-2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org